# இலங்கை இராணுவத்தின் தொண்டர் படைக்கு பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான விண்ணப்பங்கள் கோருதல்

1. இலங்கை இராணுவத்தின் தொண்டர் படைக்கு பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் பயிற்சி அளிக்கப்படும்.

2. இலங்கையில் பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்து வெளியேறும் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர்களுக்கு பாதுகாப்புக் கற்கையில் டிப்ளோமா வழங்கப்படும். அவர்கள் 2ஆம் லெப்டினன்ட் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்பட்டு தகைமைகளுக்கும் இலங்கை இராணுவத்தின் தேவைகளுக்கும் ஏற்ப இலங்கை இராணுவ தொண்டர் படையின் படையணி ஒன்றிற்கு உள்ளீரக்கப்படுவர்.

3. **அடிப்படை தகைமைகள்.**

அ. குடியுரிமை : இலங்கை பெண் பிரஜையாக இருத்தல் வேண்டும்.

ஆ. சிவில் அந்தஸ்து : திருமணமாகாதவராக இருத்தல் வேண்டும்.

இ. வயது : 2024 டிசம்பர் மாதம் 31ஆம் திகதிக்கு 18 வயதுக்கும் 24 வயதுக்கும் இடைப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

ஈ. உயரம் : 5 அடி 3 அங்குலத்திற்கு (162cm) குறையாது இருத்தல் வேண்டும்.

உ. நிறை : 52 கிலோவிற்கு (99 இறாத்தல்) குறையாது இருத்தல் வேண்டும்.

ஊ. பார்வைக் கூர்மை : 6/6 (மூக்கு கண்ணாடி மற்றும் வில்லை பாவிக்காது) இருத்தல் வேண்டும்.

எ. உடற்திணிவு சுட்டி (B.M.I. Index) : 18.5 $Kg/m^2$ - 25$Kg/m^2$ இடைப்பட்டதாக இருத்தல் வேண்டும்.

4. **கல்வித்தகைமைகள்.**

அ. க.பொ.த (உயர் தர) பரீட்சையில் மூன்று தடவைகளுக்கு மேற்படாதவாறு ஒரே அமர்வில் மூன்று (03) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் (சாதாரண சித்தி) வேண்டும். பொது சாதாரண பரீட்சையில் 30% புள்ளிகளை பெற்றிருத்தல்.

*மற்றும்*

ஆ. க.பொ.த (சாதாரண தர) பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத அமர்வுகளில் ஒரே தடவையில் ஐந்து (05) பாடங்களுக்கு திறமைச் சித்தியுடன் எட்டு (08) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். அத்துடன் மூன்றுக்கு மேற்படாத அமர்வுகளில் ஆங்கிலம், கணிதம் மற்றும் விஞ்ஞானம் உற்பட சிங்களம்/தமிழ் ஆகிய பாடங்களுக்கு திறமைச் சித்தி பெற்றிருத்தல் அல்லது ஆங்கில பாடத்திற்கு சாதாரண சித்தி (S) மட்டும் பெற்றுள்ள விண்ணப்பதாரிகள் க.பொ.த (உயர் தர) பரீட்சையில் ஆங்கில பாடத்திற்கு திறமை சித்தி (C) பெற்றிருத்தல் அல்லது ஆங்கில மொழி மூலம் NVQ – 4 ஆம் மட்டத்தில் பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி நிறுவனமொன்றிடமிருந்து டிப்ளோமா / பட்டம் பெற்றிருத்தல். (NVQ சான்றிதழை சமர்ப்பித்தல் வேண்டும்)

*அல்லது*

இ. இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் அங்கீகரிக்கப்பட்ட க.பொ.த (சாதாரண தரம்) மற்றும் க.பொ.த (உயர்தரம்) பரீட்சைகளுக்குச் சமமான சர்வதேசப் பரீட்சை ஒன்றில் (Pearson

Edexcel GCSE,GCE மற்றும் Cambridge அல்லது ஏனைய) அதற்குச் சமமான சித்தியை பெற்றிருத்தல் வேண்டும் (மேலே உள்ள கட்டாயப் பாடங்கள் உட்பட)

5. **வேறு தகைமைகள்:** சர்வதேச / தேசிய / மாகாண / மாவட்ட மட்டத்தில் விளையாட்டு, தலைமைத்துவம், வேறு வெற்றிகளை பெற்றிருத்தல் மற்றும் பிற மொழிகளை கையாளக்கூடிய திறமை (சிங்களம் மற்றும் ஆங்கிலம் தவிர) விசேட தகைமைகளாக கருதப்படும்.

6. **பொது.**

அ. இராணுவ தளபதியினால் நிர்ணயிக்கப்பட்டு, அமைச்சினால் அனுமதிக்கப்பட்ட கல்வி மற்றும் ஏனைய தகைகைள் தொடர்பிலான நிபந்தனைகளை பூர்த்தி செய்தவர் மட்டுமே தொண்டர் படையணி உத்தியோகத்தர் அதிகாரவாணை பெறுவதற்கு தகுதியுடையவராவார்.

ஆ. 1956 செப்டம்பர் மாதம் 25ஆம் திகதி அல்லது அதற்கு பின்னர் இலங்கை தொண்டர் படையணிக்கு அதிகாரவாணையுடன் இணைத்துக் கொண்டு சகல புதிய உத்தியோகத்தர்கள் அரச மொழி தொடர்பிலான தகைமைகளை பெற்றுக் கொள்ள வேண்டும் என்பதோடு 1956 இலக்கம் 33 அரச கரும மொழி சட்டத்தின் நிபந்தனைக்கும் அரச கரும மொழி கொள்கையினை செயற்படுத்த தற்போது நடைமுறைப்படுத்தும் மற்றும் எதிர் காலத்தில் முன்வைக்கப்படும் ஏதேனும் கட்டளைக்கு அல்லது நிபந்தனைக்கு அமைவாக செயற்படல் வேண்டும்.

இ. உத்தியோகத்தர் ஒருவரினது பிரஜாஉரிமை ரத்துச் செய்யப்படும் பட்சத்தில் உரிய அதிகாரியினால் இராணுவ தளபதிக்கு உடனடியாக அறிவித்தல் வேண்டும்.

ஈ. தொண்டர் படையணியில் சேவையாற்றுகையில் இலங்கை கடற்படை அல்லது இலங்கை விமானப்படையில் இணைந்துக் கொள்ளல் ஆகாது.

உ. நிரந்தர படை, நிரந்தர உப சேவை, இலங்கை பொலிஸ் மற்றும் இலங்கை சிறைச்சாலை சேவை என்பவற்றின் உறுப்பினர்கள் தொண்டர் படையில் அதிகாரவாணை பெற்றுக் கொள்ள முடியாது.

ஊ. அரச மொழி சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு அமைய நிரந்தர படையின் அரச சேவையில், அரச தாபனத்தின், அரச நிறுவனத்தின் அல்லது கூட்டுதாபனத்தில் ஓய்வு பெற்ற எவருக்கும் தொண்டர் படையணி அல்லது படையலகின் சேவைக்கு அதிகாரவாணை வழங்கப்படுவதில்லை.

எ. கடுமையான குற்றங்களுக்கு தண்டனை வழங்கப்பட்ட எவருக்கும் தொண்டர் படையணி அல்லது படையலகின் சேவைக்கு அதிகாரவாணை வழங்கப்படுவதில்லை.

7. **சேவை நிபந்தனைகள்.**

அ. பயிற்சிக் காலத்தின் இறுதியிலிருந்து (அதிகாரவாணைக்கு நியமனம் செய்யப்பட்ட திகதியிலிருந்து) 05 வருடங்கள் கட்டாயமாக இராணுவ சேவையில் ஈடுபடுதல் வேண்டும். அதற்காக, இலங்கை இராணுவத்துடன் பிணைமுறியொன்றிக்கும் ஒப்பந்தமொன்றிக்கும் உட்படுத்தப்படுவர்.

ஆ. பயிற்சிக் காலத்தில் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் மாத சம்பளம் ரூ.91,551.80 ஆகும். (அனைத்து கொடுப்பனவுகள் அடங்கலாக). பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவராக சேவையாற்றும் காலப்பகுதியில் அவர்கள் எந்தவொரு சம்பள அதிகரிப்புக்கும் உரித்துடையவராகமாட்டார்.

இ. பெண் பயிலிளவல் உத்தியோகத்தர்கள் இலங்கை இராணுவ கல்வியற் கல்லூரியில் 12 மாத கால பயிற்சியைப் பெறுதல் வேண்டும்.

ஈ. பயிற்சிக் காலப்பகுதியில் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர்களின் அந்தஸ்து சாதாரண சிப்பாய்களுக்கு சமமாக இருக்கும் என்பதுடன், அவர்கள் இராணுவச் சட்டத்திற்க்கும் சிவில் சட்டத்திற்கும் கட்டுப்படுதல் வேண்டும்.

**உ. பாடநெறியிலிருந்து விலகுதல் / நீக்குதல்.**

(1) பயிற்சிக் காலப்பகுதியில் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவர் தனது சுய விருப்பில் தனது அதிகாரவாணைக்கான அபேட்சகத்துவத்தை முடிவுறுத்துவாராயின், அப்பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் சார்பில் இலங்கை குடியரசு செலவழித்த எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை சோசலிச சனநாயக குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(2) பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவர் பயிற்சிக் காலத்தில் ஏதாவதொரு சந்தர்ப்பத்தில் அல்லது துர்நடத்தை காரணமாக விலக்குதல், தனது மோசமான பாதுகாப்பு அறிக்கை, தன்னால் தவிர்க்க கூடிய காரணிகள் காரணமாகவோ அதிகாரவாணை வழங்கப்படுவதற்கு தகுதியற்றவர் என உத்தியோகத்தர்களினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படும் பட்சத்தில், உத்தியோகத்தர் சார்பில் இலங்கை சோசலிச சனநாயக குடியரசு செலவழித்த எல்லாச் செலவுகளையும் அவருடைய பாதுகாவலர் அல்லது பிணையாளர்கள் இலங்கை சோசலிச சனநாயக குடியரசுக்கு திருப்பிச் செலுத்துதல் வேண்டும்.

(3) பாடநெறியிலிருந்து விலகிய, விலக்கப்பட்ட அல்லது மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் தகுதியற்றவர் என பயிற்சியிலிருந்து நீக்கப்பட்ட பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவருக்கு மீண்டும் இலங்கை இராணுவத்தின் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவராக இணைந்து கொள்ள முடியாது.

**8. சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள்**: இலங்கை இராணுவத்தின் தொண்டர் படையின் உத்தியோகத்தர்களாக இரண்டாம் லெப்டினன் நிலையில் அதிகாரவாணைக்கு நியமிக்கப்படும் போது, அவர்கள் இலங்கை இராணுவத்தின் உத்தியோகத்தர்களுக்குரிய பின்வரும் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்படுவார்கள்.

| **தொடர் இல.** | **நிலை** | **அரச முகாமைத்துவ சுற்றறிக்கை இல. 3/2016 இன் படி** | | |
|---|---|---|---|---|
| | | **திரட்டிய சம்பளம் 2020 முதல்** | **2020.01.01 முதல் சம்பள ஏற்றம்** | **ஆகக்கூடிய திரட்டிய சம்பளம்** |
| 1 | இரண்டாம் லெப்டினன் | ரூ. 41,905.00 | - | - |
| 2 | லெப்டினன் | ரூ. 47,615.00 | 30 < 1335(வருடாந்தம்) | ரூ. 87,665.00 |
| 3 | கெப்டன் | ரூ. 55,625.00 | 24 < 1335(வருடாந்தம்) | ரூ. 87,665.00 |
| 4 | மேஜர் | ரூ. 60,965.00 | 22 < 1335(வருடாந்தம்) | ரூ. 90,335.00 |
| 5 | லெப்டினன் கேணல் | ரூ. 62,595.00 | 22 < 1630(வருடாந்தம்) | ரூ. 98,455.00 |
| 6 | கேணல் | ரூ. 76,175.00 | 17 < 2170(வருடாந்தம்) | ரூ. 113,065.00 |
| 7 | பிரிகேடியர் | ரூ. 80,515.00 | 15 < 2170(வருடாந்தம்) | ரூ. 113,065.00 |

| | | | | |
|---|---|---|---|---|
| 8 | மேஜர் ஜெனரல் | ரூ. 88,000.00 | 12 < 2700(வருடாந்தம்) | ரூ. 120,400.00 |
| 9 | லெப்டினன் ஜெனரல் | ரூ. 93,400.00 | 10 < 2700(வருடாந்தம்) | ரூ. 120,400.00 |
| 10 | ஜெனரல் | ரூ. 101,500.00 | 7 < 2700(வருடாந்தம்) | ரூ. 120,400.00 |

9. **ஏனைய கொடுப்பனவுகள் பின்வரும் மாதாந்த கொடுப்பனவுகள் செலுத்தப்படும்**

அ. தகைமை கொடுப்பனவுகள்

ஆ. இலவச உணவு அல்லது உணவுக் கொடுப்பனவுகள்

இ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் அனுமதி வாழ்க்கைப்படி (Disturbance Allowance) (திருமணமான உத்தியோகத்தர்களுக்கு மட்டும்)

ஈ. சீருடை பேணல் கொடுப்பனவு

10. **பின்வரும் வசதிகள் வழங்கப்படும் / கொடுப்பனவுகள் செலுத்தப்படும்**

அ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டிருக்கையில் இலவச தங்குமிட வசதி.

ஆ. வாடகை வீடுகளில் வசிக்கும் போது மட்டுப்படுத்தப்பட்ட வீட்டு வாடகை.

இ. இலவச சீருடை.

ஈ. திருமணமான உத்தியோகத்தர்களுக்கு பணியாள் படி (Batmen Allowance) அல்லது திருமணமாகாத உத்தியோகத்தர்களுக்கு பணியாள் சேவை (Batmen services).

உ. உள்ளே தங்குவதற்கு கட்டளையிடப்பட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கு வேலைத்தளத்திலிருந்து வீடு வரை பிரயாணம் செய்வதற்கு மாதத்திற்கு ஒரு தடவை புகையிரத ஆணைச்சீட்டொன்று.

11. **சம்பளம் மற்றும் அடுத்த கட்ட சேவை நிபந்தனைகள் தொடர்பில் பின்வரும் ஒழுங்குவிதிகள் பெண் உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும்.**

அ. இராணுவ சம்பளக் கோவை

ஆ. 1988 ஆம் ஆண்டு ஒக்டோபர் 17 ஆம் திகதிய 528/15 ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1987 ஆம் ஆண்டின் இராணுவ மகளிர் படையணி ஒழுங்குவிதிகள்.

இ. 1989 ஆம் ஆண்டு யூன் 15 ஆம் திகதி 562/11ஆம் இலக்க இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு காலத்திற்குக் காலம் திருத்தப்பட்ட 1981 ஆம் ஆண்டின் இராணுவ ஓய்வூதிய மற்றும் சம்பளப் பணிக்கொடை பிரமாணக் குறிப்பு.

12. இங்கு கீழே பந்தி 13 இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிரகடனப் பத்திரமொன்றில் பெற்றோர் அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்படல் வேண்டும் என்பதுடன், அதனை விண்ணப்பப்

படிவத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். மேற்படி அபேட்சகர்களை நியமிப்பதற்கு முன்னர் அபேட்சகர்களின் பெற்றோர் அல்லது பாதுகாவலர்கள் பிரகடனத்தில் உள்ளவாறு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசுடன் பிணைமுறியொன்றில் கையொப்பமிடுதல் வேண்டும். தந்தை உயிருடன் இருக்கும் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் ஒருவரின் பாதுகாவலராக தந்தை இருப்பார் என்பதுடன், அவர் உயிருடன் இல்லாதிருப்பின் மட்டும் தாய் அல்லது பாதுகாவலர் பாதுகாவலராக இருப்பர்.

13. **விண்ணப்பதாரரின் தாய், தந்தை அல்லது பாதுகாவலரால் கையொப்பமிடப்பட வேண்டிய பிரகடனம்**

அ. இலங்கை இராணுவத்தின் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் விண்ணப்பதாரரான ...................... என்பவரின் தந்தை/தாய்/பாதுகாவலர் ஆவேன்.

ஆ. மேலே குறிப்பிடப்பட்டுள்ள விண்ணப்பதாரர் இலங்கையிலோ அல்லது வெளிநாட்டிலோ பயிற்சி நெறியைத் தொடர தெரிவு செய்யப்படின், இங்கு பின்வரும் விடயங்கள் தொடர்பிலான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

(1) பயிற்சிக் காலத்தின் போது விண்ணப்பதாரருக்கு ஏற்க நேரிடும் அனைத்து தனிப்பட்ட செலவுகளையும் ஏற்றல்.

(2) மேற்கூறிய விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் சுய விருப்புடன் அதிகாரவாணையிலிருந்து வெளியேறினால், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்துதல்.

(3) மேற்குறிப்பிட்ட விண்ணப்பதாரர் பயிற்சிக் காலப்பகுதியில் எந்தவொரு சந்தரப்பத்திலும் (துர்நடத்தை காரணமாக அல்லது தனது கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட காரணி காரணமாக) அதிகாரவாணை பெறுவதற்குத் தகுதியற்றவர் என அதிகாரிகளினால் அறிக்கை சமர்ப்பிக்கப்படுமாயின், அவர் சார்பில் அரசாங்கத்திற்கு ஏற்க நேரிட்ட அனைத்து செலவுகளையும் இலங்கை குடியரசிற்கு திருப்பிச் செலுத்தல்.

❖ பொருந்தாத சொற்களை வெட்டி விடுக.

..............................................

தாய்/தந்தை/பாதுகாவலரின் கையொப்பம்

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):......................................

திகதி:................................................................

சாட்சியின் கையொப்பம்:.....................................

பெயரும் முகவரியும் (தெளிவான எழுத்துக்களில்):..........................................

14. **மொழித் தேவைகள்:** தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள், 1956 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசகரும மொழிகள் சட்டத்திற்கும் அச்சட்டத்தின் திருத்தங்களுக்கு அமைவாகவும், இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் அரசகரும மொழிக் கொள்கையை அமுல் செய்வதற்கு காலத்துக்கு காலம் விதிக்கப்படுகின்ற சட்டத்திட்டங்களுக்கும் ஏற்ப செயற்படுதல் வேண்டும்.

15. **அடையாளத்தை உறுதிப்படுத்தல்:** விண்ணப்பதாரர்கள் தங்கள் அடையாளத்தை உறுதிப்படுத்துவதற்கு ஆதாரங்களை சமர்ப்பித்தல் வேண்டும். இதற்காக ஆட்பதிவு திணைக்களம் அல்லது தபால் மா அதிபரால் வழங்கப்பட்ட அடையாள அட்டை மற்றும் மோட்டார் வாகன ஆணையாளர் நாயகத்தினால் வழங்கப்பட்ட சாரதி அனுமதி பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும்.

16. அரச சேவையில் உள்ள விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்களை, அவர்கள் தெரிவு செய்யப்படும் பட்சத்தில் விடுவிக்க முடியும் என்ற திணைக்களத் தலைவரின் அத்தாட்சியுடன் அனுப்பி வைத்தல் வேண்டும்.

17. **விண்ணப்பங்கள்:** விண்ணப்பப் படிவம் விண்ணப்பதாரரின் சொந்தக் கையெழுத்தில் கீழே காட்டப்பட்டுள்ள மாதிரிப் படிவத்திற்கமைய தயாரிக்கப்பட்டு, 2024 நவம்பர் 30 ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு, “இலங்கை இராணுவ தொண்டர் படையணி தலைமையகம், இராணுவ முகாம், சீத்தாவாக்கை, கொஸ்கம.” என்ற முகவரிக்கு அனுப்பிவைத்தல் வேண்டும். விண்ணப்பங்கள் இடப்படும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் “இலங்கை இராணுவ தொண்டர் படையின் பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் பாடநெறியிக்கு பெண் பயிலிளவல் உத்தியோகத்தர் பதவிக்கான விண்ணப்பம்” எனக் குறிப்பிடுதல் வேண்டும். பிந்திக்கிடைக்கும் விண்ணப்பங்களும் மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமைய தயாரிக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது. மேலும், இத் தலைமையகத்தினால் விண்ணப்பங்கள் விநியோகிக்கப்படவும் மாட்டாது. மேலதிக விபரங்களுக்கும் விண்ணப்பங்களை பதிவிறக்கம் செய்வதற்கும் www.army.lk எனும் இணையத்தளத்தினுள் பிரவேசிக்கவும்.

18. **விண்ணப்பத்துடன் பின்வரும் சான்றிதழ்களின் நிழற் பிரதிகளை அனுப்புதல் வேண்டும்:**

அ. பிறப்புச் சான்றிதழ்.

ஆ. கல்வித் தகைமைகளை அத்தாட்சிப்படுத்தும் சான்றிதழ்கள்.

இ. பாடசாலை விடுகைச் சான்றிதழ்.

ஈ. கிராம உத்தியோகத்தர் சான்றிதழ்.

உ. பொலிஸ் தடையகற்றல் சான்றிதழ்

ஊ. விளையாட்டு மற்றும் இணைச் செயற்பாடுகளுக்கான சான்றிதழ்கள்

எ. விண்ணப்பதாரரை அறிந்த (நற்சாட்சிப் பத்திரம் வழங்கக்கூடிய ஒருவரிடமிருந்து) நபர்களிடமிருந்து அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட இரண்டு நற்சாட்சிப் பத்திரங்களும் விண்ணப்பதாரர் இறுதியாக கல்வி கற்ற பாடசாலை அதிபரிடமிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட நற்சாட்சிப் பத்திரமொன்றும்.

ஏ. பொருத்தமான ஏனைய சான்றிதழ்கள்.

ஐ. மேலும், கிராம உத்தியோகத்தரினால் அல்லது சட்டத்தரணி ஒருவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட தேசிய அடையாள அட்டையின் நிழற் பிரதியொன்றையும், அண்மையில் பெற்றுக்கொள்ளப்பட்ட 2’’ × 2 ½’’ அளவிலான புகைப்படம் ஒன்றையும் அனுப்பி வைத்தல் வேண்டும்.

19 **நேர்முகப் பரீட்சைகளை நடாத்துதல்:** மேற்கண்ட தேவைகளைப் பூர்த்தி செய்துள்ள விண்ணப்பதாரர்கள் ஆரம்ப தெரிவுக்கு உட்படுத்தப்படுவார்கள். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரிகள் இராணுவத் தளபதியால் விதிக்கப்படுகின்றவாறு பரீட்சைகளுக்குத் தோற்றுதல் வேண்டும். பாதுகாப்பு அமைச்சினால் நியமிக்கப்படுகின்ற தெரிவுக் குழுவின் முன்னால், தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் நேர்முகப் பரீட்சைக்கு உட்படுத்தப்பட்டு இறுதியாக தெரிவு செய்யப்படுவார்கள்.

20. தேர்வுக் குழுவினால் நேர்முகப் பரீட்சைக்குத் தேர்ந்தெடுக்கப்படுகின்ற விண்ணப்பதாரர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடைபெறும் இடம், நேரம் மற்றும் திகதி என்பன மின்னஞ்சல் ஊடாக அறியத்தரப்படும். நேர்முகப் பரீட்சை இலங்கை இராணுவ தொண்டர் படையணி தலைமையகம்

கொஸ்கமவில் நடாத்தப்படும். இது சம்பந்தமாக மேற்கொள்ளப்படும் பயணச் செலவுகள் அல்லது பிற செலவுகள் எதுவும் இலங்கை குடியரசினால் செலுத்தப்படமாட்டாது.

21. விண்ணப்பதாரி ஒருவரைப் பரிந்துரைக்க முயற்சி செய்யும் எவரும் நற்சான்றிதழொன்றை வழங்குவதன் மூலம் அவ்வாறு செய்யலாம். விண்ணப்பதாரியொருவரின் தேர்வை எந்த வகையிலும் தூண்டுவது அல்லது செல்வாக்குச் செலுத்த முயற்சிப்பது விண்ணப்பதாரியை தகுதி இழக்கச் செய்யும்.

22. ஆட்சேர்ப்புக்குத் தகைமை பெறாத விண்ணப்பதாரர்களுக்கு அதுபற்றி அறிவிக்கப்பட மாட்டாது. அத்தகைய விண்ணப்பதாரர்களினால் முன்வைக்கப்படுகின்ற மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்படவும் மாட்டாது.

**குறிப்பு -** இந்த வர்த்தமானி அறிவித்தல் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கிலம் ஆகிய மும்மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளது. சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிமூல வாசகங்களுக்கு இடையில் ஏதேனும் முரண்பாடு காணப்படின், சிங்கள மொழிமூல வாசகம் மேலோங்கி நிற்கும்.

**எச்எல்வீஎம் லியனகே ஆர்டப்லியூபீ ஆர்எஸ்பீ என்டியூ**
லெப்டினன் ஜெனரல்
இராணுவத் தளபதி

இலங்கை இராணுவத் தலைமையகம்,
ஸ்ரீ ஜயவர்தனபுர,
கொழும்பு.

2024 நவம்பர் மாதம்        ஆம் திகதி